# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.27/2024 நாள் : 10.03.2024**

ரூ.1072.15 கோடி மதிப்பீட்டில் மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களில் உள்ள வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், மாத்தூர், புழல் பகுதிகள் மற்றும் மாதவரம் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.1072.15 கோடி மதிப்பீட்டில் மணலி மற்றும் மாதவரம் மண்டலங்களில் உள்ள வார்டு-17 வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், வார்டு-19 மாத்தூர், வார்டு-22 & 23 புழல் பகுதிகள் மற்றும் வார்டு-25 முதல் 30 வரை உள்ள மாதவரம் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கான விரிவான பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், மாத்தூர், புழல் பகுதிகளில் 183.38 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 750 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 30.57 கி.மீ நீளத்திற்கு 150 மி.மீ முதல் 1000 மி.மீ விட்டமுடைய விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 09.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 7,087 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 10 உந்து நிலையங்கள், 11 துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 15.77 மில்லியன் லிட்டர் கழிவுநீர் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 1,004 தெருக்களில் உள்ள குடியிருப்புகளுக்கு 18,581 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 1,30,353 பொதுமக்கள் பயன் பெறுவர்.

அதேபோல், 09.03.2024 அன்று மாதவரம் பகுதிகளில் உள்ள விடுபட்ட தெருக்களில் 99.83 கி.மீ நீளத்திற்கு 200 மி.மீ முதல் 600 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 20.44 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 1000 மி.மீ விட்டமுடைய விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 3,914 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 3 உந்து நிலையங்கள், 6 துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், நாளொன்றுக்கு 13.56 மில்லியன் லிட்டர் கழிவுநீர், கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும். இதன்மூலம், 21,787 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 1,18,065 பொதுமக்கள் பயன் பெறுவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள CHN_Metro_Water CMWSSB chennaimetrowater